**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8599

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 11.10.2025

Accepted: 19.11.2024

Published: 01.01.2025

Citation:
Anandarasa, Thanisra. "Moral Values in the Society Depicted in Silappathikaram." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 27–36.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8599

*Corresponding Author:
anantharasaathanista@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Moral Values in the Society Depicted in Silappathikaram

**Thanisra Anandarasa**
*Former Assistant Lecturer*
*Department of History, University of Jaffna*
*https://orcid.org/0009-0000-8406-6362*

**Abstract**

*Silappathikaram, one of the five great Tamil epics, is attributed to Ilango Adigal, a prince of the Chera dynasty. This work served as a model for later Tamil epics. The Sangam era is often referred to as the "Age of Righteousness" (Aram Nerikkaalam), highlighting the significance of morality during that time. The moral values presented in Silappathikaram can still be observed in the lifestyles of contemporary Tamil society. Since ancient times, people belonging to a particular culture have lived together as a society. Despite their collective way of life, they exhibited diversity and complexity. Social activities were characterized by differences and conflicts. Against this backdrop, Silappathikaram reveals various moral values relevant to the society of that period. Concepts such as justice for those who suffer injustice, the reverence for the chaste woman (Pattini), and the inevitability of fate (Uzhvinai) form the foundation of this epic. Silappathikaram also sheds light on various aspects of society, including the people's way of life, culture, religion, the status of women, political justice, and legal traditions. This study aims to illustrate the moral values presented in the epic and analyze their relevance and usefulness for the Tamil community. Additionally, under the theme "Moral Values in the Society Depicted in Silappathikaram," this research examines the extent to which the ethical principles described in the epic were followed in the societal structure of that time, how relevant they were to ancient society, and how applicable they are to modern society.*

***Keywords:*** *Culture, Asceticism, Society, Lifestyle, Silappathikaram*

**References**

1. Saminathaiyar, U. (1985). Silappathikaram. Tamil University.
2. Ragubaran, K. (2003). Cultural Patterns in Silappathikaram. Hindu Religious and Cultural Affairs Department.
3. Megararasa, T. (2015). Characters in Silappathikaram and the Characters in Kannagi's Trial: A Comparative Study. Batticaloa: District Arts, Literature, and Social Development Association.
4. Sarala Rajagopalan. (2003). Kannagi Worship. Olipathippagam, Chennai.
5. Sivagnanam, M. Po. (2006). Critical Analysis of Silappathikaram. Poongodi Publications.
6. Varadarasan, M. (1985). Kannagi. Pari Nilayam.

# சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம்

***தனிஸ்ரா ஆனந்தராசா***
மேனாள் உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**
*சிலப்பதிகாரமானது சேர அரச மரபைச் சேர்ந்த இளங்கோ அடிகளினால் ஆக்கப்பட்டதாகும். சங்கமருவிய காலம் என்றாலே அது அறநெறிக்காலம் எனக் கூறுமளவுக்கு அறம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இக்காலத்தில் ஆக்கப்பட்ட தாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் முன்வைக்கப்பட்ட அறக்கருத்துக்களை இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளிலும் அவதானிக்க முடிகின்றது. சிலப்பதிகாரமானது அக்காலச் சமூகத்திற்கு அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும், ஊழ்வினை வந்துருத்தும் போன்ற அறக்கருத்துக்கள் சிலப்பதிகாரம் காப்பியத்தின் அத்திவாரமாக அமைவதனைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் சமூகரீதியிலாக முன்வைக்கப்பட்டுள்ள அறக்கருத்துக்களை எடுத்துக்காட்டுதல், அவ் அறக்கருத்துக்கள் தமிழ் சமூகத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது என்பதனை வெளிப்படுத்துதல் என்பன இவ்வாய்வுக்கான நோக்கங்களாக அமைகின்றன.*

***திறவுச்சொற்கள்:*** *பண்பாடு, துறவு, சமூகம், வாழ்க்கை முறை, பெண்கள், சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், காப்பியம், திறனாய்வு.*

## ஆய்வின் அறிமுகம்

சங்க மருவிய கால இலக்கிய வரிசைகளிலே சிலப்பதிகாரத்திற்குத் தனிச்சிறப்பு உள்ளது. இலக்கியம் என்பது ஒரு காலத்தின் கண்ணாடியாகக் கருதப்படும். ஏனெனில் ஒரு காலகட்டத்தில் நிலவிய பல விடயங்களை அக்காலத்தில் எழுந்த ஓர் இலக்கியத்தின் மூலம் பெருமளவுக்கு வெளிப்படுத்த முடியும். அவ்வகையில் சிலப்பதிகாரம் சங்க மருவியகால வரலாற்றிற்கு முக்கியமான காப்பியமாக அமைகின்றது. சிலப்பதிகாரத்தின் தோற்ற காலம் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாத நிலையில் அது தொடர்பாக அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும் பொதுவாகச் சங்க மருவிய காலத்திற்குரிய இலக்கியமாகக் கருதப்படுகின்றது. இந்நூலில் கதாபாத்திரங்களை முன்வைத்து அக்காலச் சமூகத்திற்குத் தேவையான அறக்கருத்துக்களை வெளிப்படுத்தி இருப்பதனைக் காணலாம்.

## அறம்

அறம் என்ற சொல்லுக்கு கடமை, தர்மம், புண்ணியம், அறக்கடவுள், அறச்சாலை, தர்மதேவதை, ஞானம், நல்வினை, நோன்பு என அகராதி பொருள் கூறுகின்றது. நிலையான உண்மையுடன் இணைந்து எப்போதும் அந்த உணர்வுடன் இருப்பதே அறமாகின்றது. அறம் என்றால் ஒழுக்கம் எனப் பொருள்படுகின்றது. அறமானது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளைக் குறிக்கும். நல்லவை தீயவை என்பன தொடர்பில் ஒரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பு எனலாம். அறம் வாழ்வினை மேன்மையடையச் செய்கின்றது. மக்களாகப் பிறந்த அனைவருமே உயர்வாக மதிக்கப்படுவதில்லை. அறவழி வாழ்பவர்களே உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். எக்காலத்திலும் அறவழி தவறாது வாழ்வதே உண்மையான அறம் என்பதனை

சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. உலகம் முழுவதும் எப்போதும் மாறாத அழியாத உண்மை உண்டு. நிலையற்ற பொய்களைப் பெரிதெனக் கருதி நிலையான உண்மைகளை விட்டு விலகி நிற்பதால் தான் அறம் பற்றி பெரிதாகத் தெரிவதில்லை. நம் முன்னோர்கள் வாழ்வு முழுவதும் அறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அறவழியில் வாழ்ந்தனர். தமிழர் வாழ்வானது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுகோட்பாடு களால் அமைந்தவை என்ற தத்துவத்தினை சிலப்பதிகார சமூகத்தில் இனங்காணலாம்.

சிலப்பதிகாரம் தமிழ்நாட்டுக் கதையை முன்னிறுத்தி இளங்கோ அடிகள் எனும் சமணத் துறவியால் எழுதப்பட்ட காவியம். செந்நெறி மரபும், நாட்டார் வழக்கியல் மரபும் இணைந்த இலக்கியம். அதுகாட்டும் வாழ்வியற் கோலங்கள் எல்லோராலும் விளங்கிக் கொள்ளக் கூடியன. ஓர் உயர்ந்த இலக்கியத்திற்குரிய பண்புகளெல்லாம் அதனிடையேகாணப்படுகின்றன.பாத்திரப் படைப்புக்களை நேர்த்தியாக அமைத்து, அவற்றின் ஊடாக சமூகத்திற்கான அறக் கருத்துக்களை வாழ்வியல் முறைகளை கூறியிருப்பதை இக்காப்பியத்தில் காணலாம். தமிழர் பண்பாட்டு வரலாற்றின் குறித்தவொரு காலகட்டத்து வாழ்வியல் இலட்சியங்களை கோவலன், கண்ணகி, மாதவி எனும் பாத்திரங்களினூடாக சிலப்பதிகாரம் வெளிப்படுத்துகின்றது. வாழ்க்கை என்பது பௌதீக இருப்பை வாழ்க்கையை மட்டும் காட்டுவதில்லை உளவாழ்க்கையையும் காட்டுகின்றது. குறிப்பாக பலியிடல், மறுபிறப்பு, கனவு, முலை திருகுதல், மதுரை நகர் எரிப்பு பற்றிய செய்திகள் அக்கால மக்களின் உள வெளிப்பாடுகளாக உள்ளன.

மறுபிறப்பு பற்றிய சிந்தனை இக்கால சமூகத்தில் இருந்திருக்கின்றது. கோவலனின் முற்பிறப்பும் அவனது தீவினையுமே இப்பிறப்பில் அவனுக்கு நிகழ்ந்த துயருக்கு ஏதுவாகின்றது. மதுராபதித் தெய்வம் கண்முன் தோன்றி கோவலனின் முற்பிறப்பு பற்றிக் கூறுவதிலிருந்து இதனை அறியலாம். சங்கமன் எனும் வணிகன் தன் மனைவி நீலி என்பவளுடன் வாழ்ந்தான் என்றும் அரச காரியம் செய்பவனான பரதன் என்பவன் ஆராய்ந்து நீதி வழங்குவதே அறப்பண்பு என்பதை மறந்து ஆசாரமில்லாதவனாய் சங்கமன் மீதுகொண்ட வெறுப்பினால் அவனை ஒற்றனெனக் கைது செய்து கொலை செய்தான் என்றும் அப்பரதனே இப்பிறவியில் கோவலனானான் என அத் தெய்வம் உரைத்தமையைக் குறிப்பிடலாம்.

பலியிடுகின்ற மரபும் இக்கால சமூகத்திலிருந்தது. கொற்றவைக்குப் பலியிடல் என்ற குறிப்பு இதனைப் புலப்படுத்துகின்றது. வரட்சி, வறுமை, வெப்பு நோய் என்பன மக்களை வாட்டிய போது மக்களின் மனநிலையை ஆற்றும் பொருட்டு இவ்வாறான பலியிடல் முறைமைகள் இக்கால சமூகத்தில் வழக்கில் இருந்தன. இக்கால சமூகத்தில் கனவுகள் தொடர்பான நம்பிக்கைகளும் இருந்துள்ளன. பின்னே நிகழப் போகின்ற நிகழ்வுகளை முன்பே கூறுதல் அல்லது வருவதுரைத்தல் ஊழின் வலிமையை உணர்த்தவும் புதிய திருப்பத்தைத் தருவதற்கும் கனவுகள் பயன்படுத்தப்பட்டன. கண்ணகி, கோவலன், பாண்டிமாதேவி ஆகியவர்களது கனவுகள் பற்றிய குறிப்புக்கள் இக்காலத்தில் சமூகத்தின் வாழ்வியல் முறைமைகளை தெளிவுபடுத்துகின்றன. கோவலனின் கனவிலே கீழ்மகனொருவனால் ஆடை களையப்பட்டு எருமை மீது ஏற்றிச் செல்லப்படுவதாகவும், கண்ணகியினுடைய கனவிலே கோவலன் தன்னை விட்டுப்பிரிதல், இறப்பு, மதுரைநகர் அழிப்பு போன்றனவும் பாண்டிமாதேவியின் கனவிலே செங்கோல் விழுவது, கடைவாயில் மணியோசை கேட்டல், ஞாயிற்றினை இருள் விழுங்குதல், இரவில் வானவில் தோன்றுதல், பகலில் நட்சத்திரங்கள் விழுதல், இயற்கைக்கு மாறுபட்ட நிகழ்வுகள் நடத்தல்

போன்றன குறிப்பிடப்படுகின்றன. அறம் தவறும் நிலை ஏற்படவுள்ளதை இளங்கோ அடிகள் அக்காலத் தமிழ்ச்சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த நம்பிக்கைகளில் ஒன்றாகிய கனவுகள் வாயிலாகச் சித்தரித்துள்ளதைக் காணலாம்.

அறவழியில் நின்றமையால் கண்ணகியை தெய்வநிலைக்கு உயர்த்திக் காட்டியும், கோவலனின் கொலையும் பாண்டிய அரசனின் மரணமும் ஊழ்வினைப் பயனே எனக் கூறினாலும் அறவழி நின்று அரசு செயற்படாது நிற்பின் அது அழிந்தே விடும் என்பதையும் பாண்டியனுக்கு ஏற்பட்ட கதி மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். ஊழ்வினையாக இருந்தாலும் நீதி வழி ஒழுகாததே பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட கதிக்குக்காரணம் என்பதையும், நீதி செலுத்தும் அரசன் எதுவித சலனமும் இன்றி இருக்க வேண்டும் என்பதையும் கொலைக்களக் காதையிலே கூறியிருப்பதனைக் காணலாம். இக்காப்பியத்தில் பொதுவான அரசநெறி, அறவழி ஆட்சி முறை, இறைமுறை பிழையாதஆட்சிமுறை ஆகியன பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. நீதியான ஆட்சி பற்றிய செய்திகள் எக்காலத்திற்கும் பொதுவானவையே. இன்றைய காலகட்டத்திற்கும் அரசியல் அடிப்படையில் இத்தகைய அணுகுமுறைகள் தேவையானவையாகக் காணப்படுகின்றன. ஏனெனில் அறமுடைய அரசு மூலம் செம்மையான சமூகத்தைக் கட்டமைக்க முடியும்.

### அரசியல் நீதி, சட்டம்

சமூகம் என்பது தொன்மையான காலத்திலிருந்தே பண்பாட்டுக்குட்பட்ட மாந்தர் சமூகமாய் இணைந்து வாழப்பழகிக் கொண்டதுடன் தோன்றியிருந்தது. மக்கள் சமூகமாக வாழ்ந்த போதிலும் பல்நோக்கும், பல் நிலைத்தன்மையும் சார்ந்தவர்களாக விளங்கினார்கள். நீதி என்பது ஒழுக்கம் என்பதனைச் சுட்டி நின்று வழக்கம், மரபு எனும் பொருள் கூறும் வகையிலான நடத்தையினைச் சுட்டுகின்றது. நீதி என்ற பதம் அறத்தைச் சுட்டுவதாக இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன.

**"நீதி யீறாக நிறுத்தினள்" - திருமந்திரம்**

**"உணர்ந்தாய் மறை நான்கு மோதினாய் நீதி"**
**-திவ்விய பிரபந்தம்**

**"நீதியும் பிறவும் மோதிய வெலாம்"**
**- பெருங்கதையும் பழந்தமிழ் இலக்கியங்களும்**

**"அறனோடு புணர்ந்த திறனெறி செ ங்கோல்"**
**"அரசியல் பிழையாது அறநெறி காட்டி"**
**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"**
**"அறன் கடைப்படாஅ வாழ்க்கை"**

என்பவற்றை முன்னிறுத்தி அறம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக எடுத்துக்காட்டப் படுகின்றது (இரகுபரன், 2003: 176).

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவது என்பது சிலப்பதிகார சமூகம் காட்டும் அறம். "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" எனும் பழமொழிக்கமைய வினையின் பயனே வாழ்வின் செயற்பாடெனும் அடிப்படையான நீதியைச் சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் காணலாம். குறிப்பாக அறமானது பல்வேறுபட்ட மாந்தர்களின் வழி சமூக வாழ்வில் அமைந்த அம்சங்களினூடாக அன்றைய சமூகநீதி நெறியைச் சிலப்பதிகாரம் அடையாளப்படுத்துகின்றது. ஒரு பண்பாட்டில் எல்லா கூறுகளிலும் அறம் எனும் விடயத் தினை முன்னிறுத்தி கட்டமைக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரதிபலிப்பை சிலப்பதிகாரத்தில் காணலாம். மக்களது வாழ்க்கைமுறை, அரசியல், சமயம், சமூக சிந்தனை, பெண்களது நிலைமை, நீதி மரபுகள், சட்ட மரபுகள் போன்ற சகல விடயங்களிலும் அறம் சார்ந்த கருத்துக்கள் முன்னிறுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பெண்களது வாழ்க்கை முறையும் பெண் அறமும்**

மக்களினத்திலே இரு பாலினம் என்றால் ஆண் இனம் புறத்திற்கும், பெண் இனம் அகத்திற்கும் என சமூகத்தில் தனித்து வைத்துள்ளது. ஆனாலும் இன்றைய காலத்தின் போக்கினால் இன்று பெண்கள் ஆண்களின் உடல் உழைப்பிலும் இன்ப துன்பங்களிலும் பங்கேற்கும் நிலை ஏற்பட்டு உள்ளதைக் காணலாம். சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் முக்கிய இடத்தில் இருந்துள்ளதை இளங்கோவடிகளின் பின்வரும் கூற்றிலிருந்து அறியமுடிகின்றது. "மக்களின் ஒம்பு மனைக் கிழத்தி பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ் வெய்" என அக்காலத்துப் பெண்களைப் பாராட்டியுள்ளார். மிகக் குறைந்த வயதில் இக்காலப் பெண்கள் திருமணம் செய்தனர். கண்ணகிக்குப் பன்னிரு வயதில் திருமணம்நடைபெற்றது. மாலை நேரங்களில் பெண்கள் முல்லை மலரை நெல்லுடன் தூவி இறைவனை வழிபட்டனர் போன்ற பல செய்தியிகளை அறியலாம் (இரகுபரன், (2003). "பக 44-88)".

**"அகல் நகர் எல்லாம் அரும் பவிழ் முல்லை**
**நிகர் மலர் நெல்லோடு தூஉய்"**

என்பதனைக் கூறலாம்.

(கனாத்திறம் உரைத்தகாதை பாடல்வரி 5)

சிலப்பதிகாரத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்புகளைக் கூறுவதனூடாக அக்காலத்தவர்களது வாழ்க்கை முறைகள் எந்தளவுக்குச் சமூகத்தில் செல்வாக்கோடு இருந்தது என்பதனை இவ்விலக்கியத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஒரு பண்பாட்டின் உயர்வாகக் கருதப்பட்ட கருத்துக்களை அப்பண்பாட்டிற் தோன்றிய காவியங்களில் வெளிப்படையாக காணலாம். காவியப்பாத்திரங்கள் அழகியல் இரசனைக் கப்பால் மனித வாழ்க்கை மற்றும் அவ்வாழ்க்கையின் விழுமியங்கள், போதனைகள் மற்றும் பல விடயங்களும் சிலப்பதிகாரத்தின் இலட்சியங்களாக வெளிப்படுத்தப்படுவதையும், அதேவேளை அக்கால மாந்தர்களின் உலகியல் வாழ்க்கையை மறைமுகமாகக் கொண்டும் அமைந்திருக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் கோவலன் காப்பிய நாயகனாக இருப்பினும் அதனை நகர்த்திச் செல்லும் பிரதான பாத்திரங்களும் துணைப் பாத்திரங்களும் பெண்களாகவே இருப்பதனால் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் பெண்களின் நிலையை அறிவதற்குச் சிலப்பதிகாரம் மிகவும் பொருத்தமானதொரு இலக்கியமாக அமைகின்றது. இயற்கையின் அம்சமாகவும் பிரபஞ்சத்திற்கும் தனிமனிதனுக்கும் தாயென்ற நிலையிலும் மனைவியாக, தாயாக, பெண்ணாக, காதலியாக பல பரிணாமங்களில் பெண்கள் சித்தரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். குறிப்பாக அக்கால சமூகத்தில் கண்ணகி, தெய்வத்தைத் தொழாது கணவனைத் தொழுதமையால் தெய்வமும் தொழும் தகைமை உடையவளாயிருந்தாள் என்றும் பின்னர் தெய்வமாகவே ஆனாளெனவும் குறிப்பிடப்படுவதனை நோக்கலாம். நியட்ஸே என்ற மெய்யியலாளர் Gay Science என்ற நூலில் "காதல் என்ற சொல்லின் கருத்தை கூறுகையில் பெண்ணினகாதல் எத்தகைய புறநடையோ அல்லது விதிவிலக்கோ இல்லாது உடலாலும் உள்ளத்தாலும் கொண்ட அர்ப்பணிப்பைச் சுட்டுகின்றது. அவளது காதல் தான் விரும்பியவனிடத்து எத்தகைய நிபந்தனையுமற்ற சரணாகதியை வெளிப்படுத்துகின்றது" என்று கூறுகின்றார். சிலப்பதிகாரம் காட்டும் காதலிலே இத்தன்மையினை அவதானிக்கலாம். கண்ணகி மீதும் மாதவி மீதும் கோவலன் கொண்ட காதல் அவனது வாழ்க்கையின் ஓரம்சமாக மட்டுமே இருப்பதும் இங்கே கவனிக்கத்தக்கதாகும். பெண்கள் அக்கால சமூகத்தில் எவ்வாறான கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டனர் என்பதை அவர்களுடைய குணஇயல்புகளைச் சித்தரிப்பதில் இருந்தும் அவர்களது பாத்திரங்களின் செயற்பாடு

களினூடாகவும் வெளிப்படுத்துவதிலிருந்து கண்டு கொள்ளலாம். மேலும் குடும்ப நிலையில் வாழ்வியலின் செம்மை பேணல் பற்றியும்ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். கண்ணகியை வணிக வாழ்வியலைப் பேணுபவளாகவும், மாதவியைக் கணிகை வாழ்வியலைப் பேணுபவளாகவும் சிலப்பதிகாரம் காட்டுவதுடன் காதல் வாழ்வைக்காட்ட கண்ணகியையும் காம வாழ்வைக் காட்ட மாதவியையும் கட்டமைத்துள்ளது. கண்ணகி, மாதவி என இரு பாத்திரங்கள் மூலம் பெண்மையின் குறையையும் அதேவேளை நிறையையும்வெளிப்படுத்துவதைக்காணலாம். கண்ணகியின் வளர்ப்பு நிலையும் மாதவியின் வளர்ப்பு நிலையும் வேறுபட்டது. இப்பின்னணியில் சமூகநிலையில் அவற்றால் ஏற்படும் முரண்பாடுகளை சரிசெய்வதற்குச் சிலப்பதிகாரம் முற்படுகின்றதெனலாம்.

நூலாசிரியர் சிலப்பதிகார காதையிலே கனவு காணுதல், இல்லறக்கடமைகளை மதித்தல், வஞ்சினம் கூறல், நீதிக்காகப் போராடுதல், பழி தீர்த்தல், விதியின் மீதான நம்பிக்கை,கற்புநெறியுடையவராயிருத்தல், தெய்வநிலை எய்தல், மரபை மதித்தல், துயரை வெளிக்காட்டாமை, கடிந்து ஒழு குதல், குலப்பெருமையை மதித்தல், பரிவு காட்டுதல், ஆலோசனை கூறுதல், செய்ந்நன்றி மறவாமை, தீவிர உணர்ச்சியை வெளிப்படுத்துதல், அற்புதங்கள் நிகழ்த்துதல், போன்ற விடயங்களை கண்ணகி என்ற கதாபாத்திரனூடாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். அதேபோல கலைத்திறன், வசீகரத்தன்மை, அன்பு செலுத்துதல், மனவுறுதி, தன்னம்பிக்கை, தவறை ஏற்றுக்கொள்ளல், பொருளாசையின்மை, பரத்தமை ஒழுக்கம், அறிவுரை கூறுதல் போன்றன மாதவி என்ற பாத்திரப் படைப்பினூடாக வெளிக்காட்டியுள்ளார். பெண்கள் தொடர்பான ஆண்நிலை நோக்கினைப் புனைந்துரைக்கும் குணம், இன்னொரு பெண்ணை நாடுதல், பழிந்துரைத்தல், தடுமாறி அலையும் செயற்குணம், கனவின் மீதுநம்பிக்கை,தவறைஉணர்ந்துவருந்துதல், நற்சொற்கேளாமை என்பன கோவலனின் குணப்பண்புகளாக சித்திரித்துள்ளார் (இரகுபரன்.2003:55-88). இதனை நோக்குகின்ற போது பெண்களை ஏமாற்றி அவர்களை துன்புறுத்துபவர்களும் தண்டனை அனுபவிப்பார்கள் என்பதனை நமக்கு எடுத்துக்காட்டுவதுடன் அவை தர்மத்தை மீறிய செயல்களாகக் காணப்படுமாயின் அவற்றிற்கான தண்டனைகள் நம்மை சூழ்ந்து கொள்ளும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

### சமய அறம்

சிலம்பதிகாரத்தில் பிற சமயங்களைப் புண்படுத்தாத கருத்துக்களைக் காணலாம். சமய அறம் என்பது அக்காலத்தில் முக்கியமான தொன்றாக இருந்தது. சமயம் என்பது சமூக மாற்றத்திற்கான திறவுகோல் என்பார்கள். சிலம்பு காட்டும் தமிழ்ச் சமுதாயத்தில் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் இடம் பெறுகின்றன. அக்கால மற்றும் இக்கால மக்களின் வாழ்வியல்நிகழ்ச்சிகள் பெருமளவுக்குச் சமயங்களோடு தொடர்பு கொண்டனவாக விளங்குகின்றன. இளங்கோ அடிகள் சமயக் கருத்துடன் சமயத்தை பின்பற்றுவோர் பெறுகின்ற நன்மைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். சிலம்பில் குறிப்பிடப்படும் சமயங்களை விழாக்களின் மூலமாகவும் சமயச் சான்றோர்களின் கருத்துக்களின் மூலமாகவும் தருகின்றார். சமயங்களை ஏற்றத்தாழ்வின்றி அனைத்துச் சமயங்களையும் ஒன்றாக மதிக்கும் சமய ஒற்றுமையை உணர்த்தும் ஒப்பற்ற காப்பியமாகவும் இதனைக் காணலாம். “பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்” (இந்திரவிழாஊர் எடுத்தகாதை ப.169) என்பதனூடாக சைவசமயம் பற்றியும் “கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம் ஆத் தலைப்பட்ட துயர் தீர்க்க” (ஆய்ச்சியர்குரவை.பா.எண்.38) என்பதனூடாக வைணவ சமயம் பற்றியும்

“மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்தணைப் புறனே”, “வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை” (வேட்டுவவரி.ப.64) என்பதன் வாயிலாக சாக்தம் பற்றியும் “சேயோன் மேய மைவரை உலகமும்” குன்றக்குறவை என்ற காதையின் வழி கௌமாரம் பற்றியும் கூறுகின்றார். மேலும் சிலம்பில் இளங்கோவடிகள் சமண சமயக் கொள்கை தொடர்பான கருத்துக்களைக் கவுந்தியடிகளின் வழி கூறுகின்றார்.

சிலம்பில் பௌத்த சமயச்செய்திகள் பலவுள்ளன. இதனால் அவ்விலக்கியத்தை பௌத்த இலக்கியமாகக் கொள்வது குறிப்பிடத்தக்கது. கோவலன் கொலையுண்ட போது அவனது தந்தை மாசாத்துவன், மற்றும் மணிமேகலை, மாதவி போன்றவர்கள் பௌத்தத்தைத் தழுவியதும் சிலம்பில் பௌத்த சமயச் செல்வாக்கைக் காட்டுவதாக உள்ளது. இவ்வாறு அக்காலத்திலிருந்த சமயங்களைக் குறிப்பிடுவதன் வாயிலாக சமயசமரச உணர்வை ஆசிரியர் காட்ட முற்படுகின்றார் எனலாம். பொதுவாகச் சமயங்கள் கூறும் அறக்கருத்துக்கள் இன்றளவிலும் தமிழர் சமுதாயத்தில் பேணப்பட்டு வருகின்றன. சமணம் இன்று வழக்கிழந்தாலும் அதன் எச்சங்கள் தமிழர் சமயத்தில் விரவியுள்ளது. எனவே சமயங்கள் தமிழ் சமூகத்தின் விழுமியத்தில் கொண்டிருக்கும் வகிபங்கினை உணர்ந்த இளங்கேவடிகள் சிலப்பதிகாரத்தில் அதற்கு முக்கிய இடம் வழங்கியுள்ளார் எனக் கருதலாம்.

## இன்றைய சமூகத்தில் அறம்

இன்றைய சமூகத்திற்கும் சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்திற்கும் இடையிலே வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. இன்றைய காலத்தில் சமூகத்தில் அறமெனச் சுட்டப்பட்ட பண்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இன்றையகாலகட்டத்தில்அரசியல், சமயம், சமூகம் என்பன அறக்கருத்துக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. இன்றைய காலத்திலே எமது சமூகத்தில் நிலவுகின்ற விடயங்களை நோக்கும்போது அறநெறிக்கும் சமூக செயற்பாடுகளுக்கும் எந்தவொரு தொடர்பும் அற்றதொரு நிலையைக் காணமுடிகின்றது. மனிதம், சுதந்திரம், தனியாள் சுதந்திரம் போன்ற பல விடயங்களை முன்னிறுத்தி இன்றைய சமூகம் செயற்பட்டாலும் கூட அறம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு அறத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை இன்றைய சமூகத்தில் காணமுடிகின்றது. பொய், அநீதி, ஆர்ப்பாட்டம், உயிர்சேதம், கடத்தல், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, போதை எனப் பல்வேறான நடவடிக்கைகளை இனங்காண முடிகின்றது. இவை அக்கால அறசமூகத்திற்கு மாறுபட்டதாகும். இன்றைய சமய மற்றும் சமூக அமைப்புக்கள் அறப்போதனைகளை மேற்கொள்கின்ற போதிலும் உண்மையான அறச் சிந்தனைகளை காண்பது அரிதாகவே உள்ளது. இதற்கு அதிக தொழினுட்பப் பாவனை காரணமென்பதையும் சமூக ஊடகங்களும் ஆய்வுகளும் வெளிப்படுத்தி வருகின்றன.

## ஆய்வு முறையியல்

சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம் என்ற தலைப்பினைக் கொண்ட இவ்வாய்வானது சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்கள் தமிழ்ச்சமூகத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது என்பதையும் சமூக ரீதியிலாக சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவதையும் நோக்கங்களாக கொண்டுள்ளது. இந்நோக்கங்களை எய்துவதற்கு விபரணஆய்வு முறையியலும், ஒப்பீட்டுஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. விபரணஆய்வு என்ற வகையில் சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறம் பற்றிய விடயங்களை முன்வைப்பதன் ஊடாக அக்கால சமூகத்தில் அறம் பெற்றிருந்த இடத்தை விபரிப்பதாக அமைகின்றது.

**கலந்தாராய்வுகளும் முடிவுகளும்**

சிலப்பதிகாரத்திலே இளங்கோ சமூகநலம் கருதியே பல நல்லறங்களைக் கூறியுள்ளார். மூன்று அறங்கள் முக்கியமானவை.குறிப்பாகப் பாண்டிய மன்னனின் செங்கோல் வளைந்து பிழைத்துக் கொண்டதை முதல் அறமாகவும். கண்ணகியின் கற்பு மேன்மைத்தன்மையை இரண்டாம் அறமாகவும் கோவலன் மாதவியைப் பிரிந்தது முதல் அவன் கொலையுண்டது முடிவாக பல நிகழ்ச்சி கள் ஊழ்வினையால் நிகழ்ந்தது என்பதனை மூன்றாம் அறமாகவும் அறியமுடிகின்றது.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்"**
**- சிலம்பு பதிகம் (55-89)**

**"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துதலும்"**
**- சிலம்பு பதிகம் (55-89)**

**"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்" - சிலம்பு பதிகம் (55-89)**

போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

**"வாழ்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு**
**யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள்"**
**(காட்சிக்காதை பாடல்வரி 105)**

என்ற வரிகளால் அறியமுடிகின்றது. பொய் பேசுபவரை தன் பாசத்தால் பற்றிப் புடைத்துண்ணும் பூதம் புகாரில் இருந்ததாகவும் மேலும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்' என்றும் குற்றமற்றவன் தண்டனையை பெறக்கூடாது என்ற அறக்கருத்தினைக் கூறிக் கற்பவரை அறத்தின்பால் நிற்க முயல்வதைக் காணலாம். வேந்தன் எவ்வழியோ குடிமக்கள் அவ்வழி என்றும் ஆட்சி என்பது மலர்ப் படுக்கை இல்லை அது ஒரு முள் படுக்கை மக்களுடைய நலன்களில் ஆர்வமுள்ளவன் மட்டுமே ஆட்சியில் அமர்ந்து நல்லது செய்யமுடியும். நாட்டில் எத்தனை தீமைகள் வந்தாலும் அத்தீமைகள் அனைத்திற்கும் அரசனே பொறுப்பாவான். எனவே விழிப்பு, நேர்மை, பற்று, அர்ப்பணிப்பு என்பவற்றுடன் ஆட்சி புரிய வேண்டும். இதனையே "மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல் துன்பமல்லது தொழுதக வில்லெ" (காட்சிக்காதை பாடல்வரி 105) என்ற வரிகளினூடாக அறியலாம். அரசன் மேலும் என்னென்ன நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதனை இளங்கோ அடிகள் பட்டியலிடுகின்றார். பகைமையை அறவே ஒழிக்க வேண்டும்: மக்கள் நலன்கருதி சிறந்த முறையில் ஆட்சி செய்ய வேண்டும்: தீமைகளை எதிர்க்க வேண்டும். மக்கள் மனம் போல் ஆட்சி செய்ய வேண்டும்: நிலைத்த புகழை ஈட்ட வேண்டும் என்ற விடயங்களை இளங்கோ வழி அறியமுடிகின்றது. பொய் பேசுபவன் அதற்கான தண்டனையை அனுபவிப்பான் என்ற கருத்தினை

**"நரகன் உயிர்க்கும் நல்லுயிர் கொண்டு**
**பரகதி இழக்கும் பண்பு ஈங்கில்லை"**
**(அடைக்கலக் காதை பாடல்வரி 85)**

என்ற வரியினூடாக அறிய முடிகின்றது. - இல்லற துறவு வாழ்க்கையின் இயல்பு

**"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை"**

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மனித வாழ்க்கை என்பது அறநோக்குடன் அமைய வேண்டும். நீதி இலக்கியத்திற்கு கதை இலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ளது. தாம் படைத்த இலக்கியத்தை மனையறம் எனவும் இளங்கோ கூறுகின்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டுடன் மனை அறத்தைக் காப்பாற்ற வேண்டும். தனிமனிதரும் மனிதசமூகமும் இல்லற வாழ்க்கையின் மாண்பினை அறிந்து கடமைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடல்"**
**(கொலைக்களக்காதை பாடல்வரி 75)**

என்ற வரிகள் வழியாக இல்லற அறங்களையும் விருந்தோம்பலின் பண்பினையும் கண்ணகியின் பாத்திரம் வாயிலாக அறிய இயலுகின்றது. துறவென்பது விடுதல், துறத்தல், பேரின்பம், முக்தி, மோட்சம், வீடுபேறு போன்ற பல அகராதி பொருளில் கூறப்படுவதை அவதானிக்கலாம். துறவு

என்பது இல்லறத்தை விட்டு நீங்கும் நிலையினைக் கூறலாம். துறவுகளில் இயல்புத் துறவுநிலை, சூழ்நிலைத்துறவு, இல்லற முதிர்ச்சிதுறவு எனத் துறவுநிலையினை மூன்றாக சிலப்பதிகாரம் சிறப்பிக்கின்றது. இளங்கோவினால் இவ்வாறு சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம் என்ற தலைப்பினைக் கொண்ட இவ்வாய்வானது சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது எனவும் சமூக ரீதியிலாக சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவதுமே இங்கு நோக்கங்களாக அமைகின்றன. சிலப்பதிகாரம் காட்டுகின்ற பல சமூகக் கோட்பாடுகளை இக்கால மக்கள் மத்தியிலும் காணமுடிகின்றது. மக்களது பல ஒழுக்கங்கள் சிந்தனைகள் பண்பாட்டு, மரபுகள் என பல விடயங்களை வெளிப்படுத்தி இருப்பதனைக் காணமுடிகின்றது. தமிழர் சமூகமரபிலே இன்றளவும் சில பண்பாட்டு மரபுகள் காணப்படுகின்றன. தமிழ்ச் சமூக வரலாற்றினைப் பொறுத்தவரையில் பண்பாடும் மரபும் பெருமளவிலே முதன்மை பெறுகின்ற தொரு விடயமாகவே அமைகின்றது. அறவழி ஒழுகுதல், விருந்தோம்பல், செய்ந்நன்றி மறவாமை, அறநெறிவழி வாழுதல் போன்ற பல விடயங்களை இந்நூலில் காணலாம். தமிழ்ச் சமூகத்திற்கே உரித்தான திருமண முறைகள், துறவு வாழ்க்கைமுறை போன்ற சமூக விழுமியங்களினை எடுத்துக்காட்டுகின்றன. இத்தன்மை மூலமாக இக்கால சமூகத்திற்கு தேவையான பல விடயங்களினை சிலப்பதிகார சமூகம் கூறுகின்ற விடயங்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அக்கால மக்களது வாழ்க்கை முறைகள் இக்கால மக்களின் வாழ்க்கை முறைகளுக்குரிய முற்போக்கான விடயங்களினை வெளிப்படுத்திய தன்மைகளைக்காணமுடிகின்றது.

## முடிவுரை

மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்றபோது சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம் என்ற தலைப்பினைக் கொண்ட இவ்வாய்வானது சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துகள் தமிழ்ச்சமூகத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது எனவும் சமூகரீதியிலாக சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவதுமே இங்கு நோக்கங்களாக அமைகின்றன. சிலப்பதிகாரக் காவியத்தில் வெளிப்படுத்துகின்ற அறம் சார்ந்த மரபு முறைமைகளினை அக்கால சமூகக் கட்டமைப்பு எந்தளவுக்குப் பின்பற்றிச் செயற்பட்டிருந்தது என்பதனை எடுத்துக்காட்டி அன்றைய கால சமூகத்திற்கு அறக்கருத்துக்கள் எந்தளவுக்கு பொருத்தமாக இருந்தன, இன்றைய கால சமூகத்திற்கு அக்கருத்துக்கள் எந்தளவுக்கு ஏற்புடையனவாக அமைகின்றன என்பதனை இவ்வாய்வானது வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. காலத்திற்கேற்ப சமூக சிந்தனைகள் மாறுபட்டாலும் சில விடயங்களில் ஒன்றித்துள்ள தன்மையினைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவை தமிழ்ச் சமூக நிலையிலும் பெருவாரியான மாற்றங்களினை ஏற்படுத்தி மக்களது வாழ்க்கைமுறைகளிலும் மாற்றங்களினை ஏற்படுத்தி இருந்தமையைக் காணமுடிகின்றது.

**“வல்வினை வளைத்த கோலை மன்னவன்**
**செல்லுயிர் நிமிர்த்திச் செங்கோலாக்கியதே”**
**-(காட்சிக்காதை பாடல்வரி100)**

போன்ற பல விடயங்களினை சிலப்பதிகாரம் வாயிலாக நாம் அறியக்கூடிய தன்மை கொண்டனவாக அமைந்துள்ளன. இவற்றினூடாக அக்காலத்து அரசியல் மரபுநிலைகள் எந்தளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதனை இனங்காணக் கூடியதாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்

1. சாமிநாதையர். உ.வே (1985). சிலப்பதிகாரம். தமிழ்ப் பல்கலைக்கழகம்.
2. இரகுபரன். க: (2003). சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள். இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.

3. மேகராசா. த. (2015). சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களும். ஒப்பியல் ஆய்வு பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் மட்டக்களப்பு.
4. சரளா இராசகோபாலன். (2003). கண்ணகி வழிபாடு. ஒளிப் பதிப்பகம் சென்னை.
5. சிவஞானம். ம.பொ. (2006). சிலப்பதிகாரத் திறனாய்வு. பூங்கொடி பதிப்பகம்.
6. வரதராசன் மு. (1985). கண்ணகி . பாரி நிலையம்.